**02.12.2019**

# Press Release

**Sub: 260 Differently Abled Students travelled in Metro Train today (02.12.2019)**

As part of celebrating the International Day for Differently Abled, CMRL in association with the Commissionerate for the Welfare of Differently Abled, Chennai undertook a Metro Train trip for the differently abled students today (02-12-2019). A total of 260 students undertook the above trip. The children who were studied in Government Aided Special Schools from several districts namely Chennai, Chengalpattu, Thiruvallur, Cuddalore, Karur, Salem, Coimbatore, Tirunelveli, Kanniyakumari and Theni.

Speech and hearing impaired, intellectually differently abled and other types of differently abled children were given a special educational trip from Egmore Metro Station to Airport and Back. Metro Rail Officials explained to them the facilities of Metro Train and Metro Rail Stations.

**02.12.2019**

**பத்திரிக்கைச் செய்தி**

**260 மாற்றுத் திறனாளி மாணவ மாணவிகள் மெட்ரோ இரயிலில் இன்று (02.12.2019) பயணம் செய்தனர்**

உலகெங்கும் ஆண்டுதோறும் டிசம்பர் 3-ஆம் தேதி உலக மாற்றுத் திறனாளிகள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது. இதனையொட்டி சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மாநில மாற்று திறனாளிகள் நலத்துறையுடன் இணைந்து இன்று (02.12.2019) சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், கரூர், சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தேனி ஆகிய 10 மாவட்டங்களில் உள்ள அரசு உதவிபெறும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 260 மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகளை எழும்பூர் மெட்ரோ இரயில் நிலையம் முதல் விமான நிலையம் மெட்ரோ வரையிலும் மற்றும் விமான நிலையம் மெட்ரோ முதல் எழும்பூர் மெட்ரோ இரயில் நிலையம் வரை மெட்ரோ இரயிலில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

வாய்பேச முடியாத, காதுகேளாத, மனவளர்ச்சி குன்றிய மற்றும் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகள் மெட்ரோ இரயிலில் பயணம் செய்தனர். இவர்களுக்கு மெட்ரோ இரயில் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள வசதிகளைப் பற்றி மெட்ரோ இரயில் நிறுவன ஊழியர்கள் விளக்கிக் கூறினார்கள்.